# வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC- 227/2024

## வழக்கு சாட்சி:PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வேல்முருகன் | தேதி : | 25.02.2026 |
| தந்தை பெயர்: | லெட்சுமணன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 25.02.2026

**முதல் விசாரணை**

நான் வருவாய்துறையில் துணை வட்டாட்சியராக பணிபுரிந்து பணி நிறைவு பெற்றுள்ளேன். இதற்கு முன்பு களக்காடு பிர்காவில் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 13.07.2013 ம் தேதி காலை சுமார் 9.30 மணியளவில் நான்குநேரி வட்டாட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் நான், மணிகண்டன், இசக்கிமுத்து என்ற துரை ஆகியோர்கள் சகிதம் மணல் அள்ளுவதை தடுக்கும் பொருட்டு ரோந்து பணியில் ஈடுபட்டிருக்கும்போது சிங்கிகுளத்தை சேர்ந்த ராமச்சந்திரன் என்பவர் சிங்கிகுளத்தில் ரோட்டில் வந்து கொண்டிருக்கும்போது மாட்டுவண்டியில் அனுமதியின்றி மணல் அள்ளிக்கொண்டு வந்தார். அவரை மறித்து அனுமதி சீட்டு இருக்கிறதா என்று விசாரித்த போது என்னை பார்த்து தேவடியா பையலே புண்டா மகனே அவமானமாக பேசி மாட்டு வண்டியில் இருந்த அருவாளை எடுத்து இத்தோடு செத்து தொல என்று சொல்லி என் கழுத்தை நோக்கி வெட்டவும் நான் சுதாரித்து விலகி விட்டேன். அந்த வெட்டு என் மேல் படவில்லை.

உடன் இருந்த தலையாரி என்னை அழைத்துக் கொண்டு சென்றார். இதனால் என்னை பணி செய்யவிடாமல் தடுத்து அவமானமாக பேசி கொலை செய்ய முயற்சித்தார். அதன் பின்பு மதியம் சுமார் 12.30 மணியளவில் எதிரி மீது நடவடிக்கை எடுக்க கோரி களக்காடு காவல் நிலையத்திற்கு சென்று புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டதுதான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அ ந்த புகார் மனு அசாஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படும் அருவாள்தான் என்னை வெட்ட பயன்படுத்தியதா என்றால் 13 வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை. அது கோழிவால் அருவாள்தான். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

சம்பவ காலத்தில் நான் எங்கு குடியிருந்தேன் என்றால் பாளையங்கோட்டையில் குடியிருந்தேன். நான் என்னுடைய அலுவலகத்திற்கு வந்துவிட்டுதான் சம்பவ இடத்திற்கு சென்றேன். தலையாரிகள் அருணாச்சலம், மணிகண்டன், வி.இசக்கிமுத்து, ஏ.இசக்கிமுத்து ஆகியோர்கள் என் அலுவலகத்திற்கு வந்து என்னுடன் வந்தார்களா என்றால் நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது அவர்களும் அங்கு வந்தார்கள். சிங்கிகுளம் கிராம நிர்வாக அலுவலர் என்னுடன் வந்தாரா என்றால் வரவில்லை. நாங்கள் வருவது சம்பந்தமாக வி.ஏ.ஓ.க்கு தகவல் கொடுத்தேனா என்றால் தலையாரிக்கு தகவல் கொடுத்தேன். நான் அலுவலகத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்தேனா அல்லது காரில் வந்தேனா என்றால் மோட்டார் சைக்கிளில் வந்தேன். என்னுடன் இருந்த தலையாரிகள் எந்தெந்த வாகனத்தில் வந்தார்கள் என்றால் மோட்டார் சைக்கிளில் வந்தார்கள். நான் ரோந்து பணிக்கு போகும் போது எந்த இடங்களில் சென்றுவிட்டு திரும்ப சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் களக்காட்டில் இருந்து பத்மநேரி மெயினில் போய் சம்பவ இடத்திற்கு சென்றேன். சம்பவத்திற்கு பிறகு எங்கெல்லாம் ரோந்து சென்றீர்கள் என்றால் சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு காவல் நிலையத்திற்கு சென்றேன். நான் தற்செயலாக எதிரி மாட்டு வண்டி ஓட்டி வந்ததை பார்த்தேனா அல்லது தகவல் கிடைத்து வந்தேனா என்றால் தற்செயலாக பார்த்தேன். நான் ரோந்து பணி வந்ததற்கான அறிக்கை எதுவும் சிங்கிகுளம் கிராம நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை என்றால் வி.ஏ.ஓ. எனக்கு கீழ் பணி புரிவதால் நான் அவரிடம் பதிவு

செய்யவேண்டியதில்லை. என்னுடன் வந்த தலையாரிகள் வட்டாட்சியரின் உத்தரவில் வந்தாரா அல்லது என்னுடைய உத்தரவில் வந்தார்களா என்றால் என்னுடைய உத்தரவில் வந்தார்கள். என்னுடன் வந்த தலையாரி வி.இசக்கிமுத்து மட்டும்தான் சிங்கிகுளம் மேல்கரை கிராமம் தலையாரி. மற்ற தலையாரிகள் எல்லாம் வேறு கிராமத்தின் தலையாரிகள் என்றால் சரிதான். எதிரி ராமச்சந்திரன் வீடு எந்த தெருவில் உள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி ராமச்சந்திரன் வீட்டில் சம்பவ காலத்தில் யார் எல்லாம் இருந்தார்கள் என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் பொதுமக்கள் சுமார் 20 பேர்கள் இருந்திருப்பார்களா என்றால் அதற்கு குறைவாகத்தான் இருப்பார்கள். சம்பவம் அரைமணி நேரம் நடந்திருக்குமா என்றால் கால் மணி நேரம் நடத்திருக்கும். சம்பவம் நடந்தரோடு எவ்வளவு அகலம் இருக்கும் என்றால் 20 அடி இருக்கும். சம்பவம் நடக்கும்போது வாகனங்கள் போய் கொண்டிருந்ததா என்றால் அது பற்றி தெரியாது. எதிரி மணலை எங்கிருந்து கொண்டு வந்தார், எங்கு கொண்டு செல்கிறார் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். மணல் எத்தனை யூனிட், எவ்வளவு மதிப்பு என தெரியுமா என்றால் தெரியாது. எதிரி ஓட்டி வந்த மாண்டி வண்டியின் சக்கரம் ரப்பர் டயரால் ஆனதா அல்லது மரத்தால் ஆன சக்கரமா என தெரியுமா என்றால் தெரியாது. மாட்டு வண்டியில் பெயிண்ட் அடிக்கப்பட்டதா என்றால் பெயிண்ட் அடிக்கப்பட்டது. அது என்ன கலர் என்றால் கருப்பு கலர் பெயிண்ட். மணல் ஆற்று மணலா, குளத்து மணலா என போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆற்றுமணல் என்று சொன்னேன். நான் எதிரி ஓட்டி வந்த வண்டியின் வலது புறம் நின்று மறித்தேனா அல்லது இடது புறம் நின்று மறித்தேனா என்றால் இடது புறம் நின்று மறித்தேன். மாட்டுவண்டியில் பூட்டியிருந்த மாடு என்ன கலரில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மணலை யார் ஏற்றிவிட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மணல் அள்ளுவதற்கான மண் வெட்டி, இரும்பு சட்டி எல்லாம் எதிரியின் வண்டியில் இருந்ததா என்றால் இருந்தது. எதிரி சம்பவ இடத்திற்கு வாகனம் ஒட்டி வருவதற்கு முன்பு நான் சம்பவ இடத்திற்கு எவ்வளவு மணி நேரத்திற்கு முன் வந்தேன் என்றால் எதிரி வரும்போது வந்தேன். நான் சம்பவம் நடந்தவுடன் சம்பவம் குறித்து நான்குநேரி வட்டாட்சியரிடம் மனு கொடுத்து எதிரி மீது களக்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க எழுத்து மூலமாக அனுமதி வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் ரோந்துக்கு செல்ல தலையாரியை அழைத்து செல்ல எழுத்து மூலமாக அனுமதி வாங்கவில்லை என்றால்

நானாகத்தான் அழைத்து சென்றேன். நான் அரசு அனுமதி இல்லாமல் எதிரி மணல் திருடுவதாக என் மேல் அதிகாரியான வட்டாட்சியருக்கு புகார் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கமாக நான் பிடிக்கும் திருட்டுத்தனமாக மணல் அள்ளும் வாகனத்தை அத்தாட்சி மூலம் கைப்பற்றி கோட்டாட்சியரிடம் ஒப்படைப்பது வழக்கம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அவ்வாறு நடைமுறை பின்பற்றவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் உண்மையில் நடைபெறாததால்தான் நான் அப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி அரசு அனுமதியிடன்தான் மணல் அள்ளினாரா அல்லது அனுமதியின்றி அள்ளினாரா என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அரசு அனுமதியின்றி கொண்டு போனார். சம்பவத்திற்கு பிறகு எதிரி மாட்டு வண்டியை எந்த திசையை நோக்கி ஓட்டி சென்றார் என்றால் பார்க்கவில்லை. நான் புகார் கொடுக்கும் போது யாரை அழைத்து சென்றேன் என்றால் தலையாரியை அழைத்து சென்றேன். தலையாரின் பெயர் அருணாச்சலம். எதிரியின் பெயர், முகவரி யார் சொல்லி தெரியும் என்றால் தலையாரி சொல்லி தெரியும். எதிரி மாட்டுவண்டியில் மணல் அள்ளினார் என்று சொல்வது பொய் என்றாலும், அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றால் சரியல்ல. சிங்கிகுளம் சுற்றுபகுதியில் மணல் திருட்டு கண்டுபிடிக்கவில்லை என்றால் என்னால் மேல் அதிகாரியின் தூண்டுதலின் பேரில் எதிரியின் மீது பொய் வழக்கு போட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.